சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் உதகை காந்தல் கால்பந்து அகாடமி நடத்தும் அகில இந்திய ஐவர் கால்பந்து போட்டியினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் இணைந்து கலந்து கொண்டு பார்வையிட்டு கால்பந்தாட்ட வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை நான்காவது தளத்தில் இயங்கி வரும் மாநில அளவிலான வாக்காளர் குறை தீர்க்கும் மையத்தை (with Toll Free No. 1800 4252 1950, State Contact Centre) (18.03.2024) அன்று தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாகு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சங்கர் லால் குமாவத் மற்றும் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ரீகாந்த், ஆகியோர் உடனிருந்தனர்.

‘இந்தியா’ கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள் ஆதரவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை,மார்ச்.21-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது ஆகியோர் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் மற்றும் நிர்வாகிகள்

அதே போன்று இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்;

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா மற்றும் நிர்வாகிகள்;

ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் மற்றும் நிர்வாகிகள்;

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் மற்றும் நிர்வாகிகள்;

சமத்துவ மக்கள் கழகத்தின் தலைவர் எர்ணாவூர் நாராயணன் மற்றும் நிர்வாகிகள்; மனிதநேய ஜனநாயகக் கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் நிர்வாகிகள் மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் முருகவேல்ராஜன் மற்றும் நிர்வாகிகள்; தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் மற்றும் நிர்வாகிகள்; ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, ‘இந்தியா’ கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க. பொன்முடி, ஆ. இராசா, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்கள் டி. கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, எ.வ. வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

ஒன்றியச் செயலாளர் அ.ம.துரைவீரமணி ஏற்பாட்டில்

அயப்பாக்கத்தில் தேர்தல் அலுவலகம்!

கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்

திருவள்ளூர் மார்ச் 21;

சென்னை தெற்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சியில் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி INDIA கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தை ஒன்றிய கழகச் செயலாளர் அ.ம.துரைவீரமணி ஏற்பாட்டில் இன்று 2103 2024 காலை 09 மணியளவில் டி.என்.இ.பி. அயப்பாக்கத்தில் கழகப் பொருளாளர் கழக வேட்பாளருமான டி.ஆர். பாலு முன்னிலையில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சர் மா.சுப்பிரமணியம் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்து மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் க.கணபதி மற்றும் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து அயப்பாக்கம் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார்கள் இதில் தோழமைக் கட்சி நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கூட்டணி கட்சி சார்ந்த மாவட்ட ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

காத்திருப்போர் பட்டியலில் ரத்தான டிக்கெட் மூலம்

3 ஆண்டில் ரூ.1,230 கோடி வருவாய்!

ரயில்வே நிர்வாகம் தகவல்

புது டெல்லி,மார்ச்.21-

ரயில் டிக்கெட்டில் காத்திருப்போர் பட்டியலில் ரத்தான டிக்கெட் மூலம் கடந்த 3 ஆண்டில் ரயில்வே நிர்வாகத்துக்கு ரூ.1,230 கோடி வருவாய் கிடைத்துள்ளது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தகவல் அறியும் உரிமை சட்ட ஆர்வலர் விவேக் பாண்டே என்பவர், இந்திய ரயில்வேயிடம் சில தகவல்கள் கேட்டு விண்ணப்பித்திருந்தார். அந்த விண்ணப்பத்திற்கு ரயில்வே நிர்வாகம் அளித்த பதிலில், ‘ரயிலில் டிக்கெட் முன்பதிவு செய்து, காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களின் ரத்தான டிக்கெட் மூலம் கிடைக்கும் வருவாய் குறித்து தகவல் கோரப்பட்டது. அந்த வகையில் 2021ம் ஆண்டில், 2.53 கோடி டிக்கெட்டுகள் ரத்து செய்யப்பட்டன.

இதன்மூலம் ரயில்வேக்கு ரூ.242.68 கோடி வருவாய் கிடைத்தது. 2022ல் 4.6 கோடி டிக்கெட்டுகள் ரத்து செய்யப்பட்டன. இதன் மூலம் ரூ.439.16 கோடி வருவாய் கிடைத்தது. 2023ல் 5.26 கோடி டிக்கெட்டுகள் ரத்து செய்யப்பட்டதன் மூலம் ரூ.505 கோடி பணம் கிடைத்தது. 2024ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் 45.86 லட்சம் டிக்கெட்டுகள் ரத்து செய்யப்பட்டதன் மூலம் ரயில்வேக்கு ரூ.43 கோடி வருவாய் கிடைத்துள்ளது. அதன்படி கடந்த 2021 முதல் 2024ம் ஆண்டு (ஜனவரி வரை) வரை ரத்து செய்யப்பட்ட காத்திருப்புப் பட்டியல் டிக்கெட்டுகள் மூலம் ரூ.1,229.85 கோடி வருவாய் கிடைத்தது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வேயின் ஐஆர்சிடிசி மூலம் பதிவு செய்யப்பட்ட இடிக்கெட்டுகள் ரத்து செய்யப்பட்டால் சேவைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நெட் பேங்கிங் அல்லது டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகள் மூலம் டிக்கெட் முன்பதிவு செய்தால், குளிரூட்ட ப்பட்ட வகுப்புகளுக்கு சேவை கட்டணம் ரூ.30 வசூலிக்கப்படுகிறது. யுபிஐ மூலம் முன்பதிவு செய்தால் ஒரு டிக்கெட்டுக்கு ரூ.20 என்ற அளவிலும், ஏசி அல்லாத வகுப்புகளுக்கு, ஒரு டிக்கெட்டுக்கு ரூ.15 (நெட் பேங்கிங் அல்லது கார்டு) என்ற அளவிலும், யுபிஐ மூலம் முன்பதிவு செய்யும் டிக்கெட்டுக்கு ரூ.10 வசூலிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!

கன்னிகை ஜி.ஸ்டாலின் - ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா - க.தனசேகரன்- கே. கண்ணன் பங்கேற்பு!

137 ‘ஆ’ வட்ட கழக செயல்வீரர்கள் - பாகமுகவர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாடு

சென்னை, மார்ச் 21 -

கலைஞர் நகர் 137 ஆ வட்டச் செயலாளர் ஆ.கதிரேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

சென்னை தெற்கு மாவட்ட கழக செயளாளரும் மக்கள் நள்வாழ்வுதுறை

அமைச்சருமான மா.சுப்பிரமணியம்ஆலோசனைப்படி

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழகச் செயல்வீரர்கள் -

பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (21-03- 2004 வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில் சூளைப்பள்ளம் நாகாத்தம்மன் கோயில் மண்டயத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் தொகுதி பொருப்பாளர் கன்னிகை தி. ஸ்டாலின், விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தனிக்கை குழு

தலைவர் க.தனசேகரன், பகுதி கழகச் செயளாளர் கே. கண்ணன், பொதுக்குழு

உறுப்பினர்கள் உ.துரைராஜ், எஸ், முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர்

வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சக்குமார், கனிமொழி தனசேகரன், நிஹாசையத், பகுதிக் கழக

நிர்வாகிகள் எஸ்.உமார் வுதி, அஜந்தா எஸ் .ரவி, பே.தியாகு, அ.பாபு, மாவட்டப் பிரதிநிதி என்.ரவி, வட்ட கழக நிர்வாகிகள், கே.தணிகாசலம், டி. செல்லா, ஜி.ராஜேஸ்வரி, டைகர் பழனி, வி. தனசேகர், என்.ஜெகதீசன், கே.சதீஷ், எஸ்.புகழ், நாபாலா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் வட்டத்திற்குபட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாகத் தலைவர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிதள், கழக முன்னோடிகள், மகளிர்கள் செயல்வீரர்கள் தலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தெற்கு ஒன்றியம், மண்டலநாயனகுண்டா ஊராட்சி, காட்டுகொல்லை நியாய விலை கடை மற்றும் மேல்புதூர் நியாய விலை கடை ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட நியாய விலை கடை கட்டிடத்தை மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஏ.சி.தேவகுமார், டி.அசோக்குமார், கே.முருகேசன், துரைசாமி, இந்துமதி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான, தா. மோ. அன்பரசன், ஆலோசனைப்படி, ஆலந்தூர் தெற்கு பகுதி, 167 வட்ட திமுக, 166 வட்ட திமுக, சார்பில் லட்சுமி நகர் பிரதான சாலை 3 வது தெருவில் வட்ட ஆலோசனைக் கூட்டம் 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 166வது வட்டக் கழக செயலாளர் இ. உலகநாதன் ஆகியோர் தலைமையில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும்,12 வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன் எம்.சி.., ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், ஆலந்தூர் தெற்கு பகுதி துணை செயலாளர் ஆர். பாபு, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் வெ.பாண்டிச்செல்வி, பா.விஜயலட்சுமி, மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், தகவல் தொழில்நுட்ப அணிவினர் மற்றும் கழக நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.